(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 150.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2026 மே 20, புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ (பேராசிரியர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ அர்கம் இல்யாஸ்,** வலுசக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க குணசேகர,** நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

கௌரவ **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதார பிரதி அமைச்சர்

கௌரவ **உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **அரவிந்த செனரத்,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

கௌரவ **தினிந்து சமன் ஹென்னாயக்க,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ கே.இளங்குமரன்**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி**

**கௌரவ உபுல் கித்சிறி**

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ வசந்த புஷ்ப குமார

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ மனோ கணேசன்

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ குமார ஜயகொடி

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ நந்த பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ தாஹிர் மரிக்கார்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ அசோக சபுமல் ரன்வல

**கௌரவ துரைராசா ரவிகரன்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ மனோஜ் ராஜபக்ஷ்**

**கௌரவ சுனில் றாஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே**

**கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்**

**கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன**

**கௌரவ ருவன் விஜேவீர**

**கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான**

**கௌரவ ஜகத் விதான**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ பஸ்மின் சரீப்**

**கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார் :—

**I**

“2026 மே 19 ஆம் திகதிய எனது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மனுவிற்கு மேலதிகமாக, அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், ‘பணம் தூய்தாக்கல் தடை (திருத்தம்)’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலுமொரு மனுவொன்றின் பிரதியொன்று எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.”

**II**

“வாய்மூல விடைக்கான வினாக்களுக்கான திகதிகளை நிர்ணயித்து, அதனை ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கும்போது தற்போது பின்பற்றப்படும் நடைமுறைகள் தொடர்பாக சில பாராளுமன்ற உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு, 2025.11.27ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தின்போது மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம், ‘வாய்மூல விடைக்கான வினாக்களுக்கான திகதிகளை நிர்ணயித்து, அதனை ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கும்போது பின்பற்றப்படும் தற்போதைய நடைமுறைகள்’ தொடர்பாக பாராளுமன்றச் செயலகத்தால் விபரமான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

2026.01.14ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தின்போது மேற்படி அறிக்கையை ஆராய்ந்ததன் பின்னர், குழு அதற்கிணங்கியதுடன் இது தொடர்பான விடயங்களை முன்வைத்த மற்றும் ஆர்வமுடைய பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளையும் பெற்றுக் கொண்டு, அது தொடர்பாக பின்வரிசைக் குழுவின் பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்வது பொருத்தமானதென மேலும் தீர்மானித்தது.

அதற்கமைவாக, 2026.03.04ஆம் திகதி நடைபெற்ற பின்வரிசைக் குழுக் கூட்டத்தின்போது, இது தொடர்பாக உரிய உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதன் பின்னர், பாராளுமன்றச் செயலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, தற்போது பின்பற்றிவரும் நடைமுறையை அவ்வாறே பின்பற்றுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதுடன், அது தொடர்பான பின்வரிசைக் குழுவின் அறிக்கையை 2026.05.08ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தின்போது ஆராய்ந்து, அதனை ஏற்றுக்கொண்ட குழு, அது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களை விழிப்பூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்ததன் பிரகாரம், மேற்படி விடயங்களை இவ்வுயரிய சபையின் உறுப்பினர்களின் தயவான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதற்கமைவாக, வாய்மூல விடைக்கான வினாக்களுக்கான திகதிகளை நிர்ணயித்தல் மற்றும் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குதல் தொடர்பான தற்போதைய நடைமுறைக்கு பின்வரிசைக் குழுவும், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவும் இணங்கியமையால், அந்நடைமுறை அவ்வாறே எதிர்காலத்திலும் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மேலும் அறியத்தர விரும்புகிறேன்.

அதற்கமைவாக, தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இந்நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்திலும் செயற்படுவதற்கு தங்களின் ஒத்துழைப்பினை எதிர்பார்க்கிறேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் சபரகமுவ மாகாண சபை தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தொழில் அமைச்சு தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான மத்திய கலாசார நிதியத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான வ/ப லங்கா கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) பெலிஹுல்ஓய, முத்தெட்டுவேகம, மஹதென்ன, இல. 28/3 இல் வதியும் திரு. பி. திலகரத்ன த சில்வாவினது 2025.12.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வசந்த புஷ்ப குமார சமர்ப்பித்தார்.

(2) மஹ இந்துருவெ, பொகுனுகம, நெலுவ, இல. 73 இல் வதியும் திரு. ரீ.ஏ. விஜய குமாரவினது 2025.12.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ நிஷாந்த பெரேரா சமர்ப்பித்தார்.

(3) இரத்தினபுரி, மல்வல சந்தி, மீஹிட்டிய, ‘சுக்கித்த’ எனும் முகவரியில் வதியும் வதியும் திரு. என்.கே. வக்கும்புரவினது 2025.07.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுனில் ராஜபக்ஷ சமர்ப்பித்தார்.

(4) பொரலுவகே அருகில், புத்கந்த, கொலொன்ன வத்த, இல. 702 இல் வதியும் திரு. எச். ஜோதிபாலவினது 2025.06.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ சமர்ப்பித்தார்.

(5) கொழும்பு 05, பூங்கா வீதி, என்டர்சன் வீட்டுத் தொகுதி, இல. ஜே/6 இல் வதியும் திரு. தொன் தம்ஸ்ரீ லசந்த கோரலேவிதானகே மற்றும் ஏனைய பத்தொன்பது பேரினது 2025.10.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சந்தன சூரியஆரச்சி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

4. **பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. ஒத்திவைப்பு (2025 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார மீளாய்வு அறிக்கை):** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” எனப் பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(மு.ப. 11.49 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.56 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன தலைமை தாங்குவாராக” என தொழிற் கல்வி பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.29 மணிக்கு கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன தலைமை தாங்கினார்.)

“கௌரவ உபுல் கித்சிறி தலைமை தாங்குவாராக” என தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.43 மணிக்கு கௌரவ உபுல் கித்சிறி தலைமை தாங்கினார்.)

விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. அதிலிருந்து விவாதம் பிரிதொரு தினத்தில் நடைபெறும்.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 5.47 மணிக்கு தலைமைத் தாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2026 மே 21 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.